ஜெய ஜெய சத்குரு — சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் துணை — ஸ்ரீ சேஷாத்ரி சத்குரு

## ஆங்கில (2012) புத்தாண்டு வாழ்த்துக்கள்

# மகான் ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் ஆராதனை விழா

## ஸ்ரீ சக்ர மஹாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவனம்

மாடம்பாக்கம், சென்னை 600 126.

## டிசம்பர் 16, 17, 18, 2011

அவதார புருஷர்கள் பலர் உதித்த முக்தி ஸ்தலமான திருவண்ணாமலையில் இறைவனோடு இரண்டறக் கலந்து நம் வாழ்வில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் மாடம்பாக்கம் சித்தர் மகான் ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் ஆராதனை விழா அவர்களது சீடர்களால் **கார்த்திகை 30, மார்கழி மாதம் 1, 2 (டிசம்பர் 16, 17, 18)** ஆகிய தேதிகளில் வேதபாராயணம், விசேஷ ஹோமங்கள், கோமாதா பூஜை, அன்னதானம் போன்ற புனித நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளின் அருளாசியுடன் அம்பிகையை மையமாக வைத்து 18 சித்தர்களுக்கும் மற்ற தெய்வங்களுக்கும் ஆலயங்கள் நிர்மாணித்து இரு முறை (2004, 2009) கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது. மதில் சுவர் (Compound Wall) கட்டும் திருப்பணி தற்சமயம் நடந்து கொண்டு இருப்பதால் தங்களால் இயன்ற உதவி செய்து ஸத்குரு - 18 சித்தர்கள் - பராசக்தியின் அருளாசிகளை பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

### ஹோமங்கள், பூஜைகள், பலன்கள், பரிகார விபரம்

பிரம்ம ஞானிகளுக்கு நடக்கும் விழாவில் செய்யும் ஹோமங்களுக்கு ஆயிரம் மடங்கு பலன் கிடைக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். லக்ஷ்மி கடாக்ஷம் பொங்கும்.

### கணபதி ஹோமம்



பொதுவாக காரிய சித்தி அளிக்கும் ஹோமம் ஆகும்.

**தேவையான பொருட்கள் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கலச வேஷ்டி | ரூ.400/- | மோதகம் | ரூ.1500/- | அருகம்புல் மாலை | ரூ.400/- |
| புஷ்பம் | ரூ.500/- | கணபதி வஸ்திரம் | ரூ.1000/- | பூர்ணாஹுதி பட்டு பிட்டு | ரூ.300- |
| பழதிரவியம் | ரூ.500/- | நெய் | ரூ. 500/- | நைவேத்தியம் | ரூ.600/- |

### கோமாதா பூஜை



பூர்வ ஜென்ம பாவங்கள் நீங்கும். கர்ம வியாதிகள் நீங்கும்.

**தேவையான பொருட்கள்:** கோ வஸ்திரம் ரூ. 500/-, பூமாலை ரூ. 500/-.

### ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் தன்வந்த்ரி ஹோமம்

பரிமுகப் பெருமாள் என்று போற்றப்படும் குதிரை முகம் கொண்ட அறிவு தேவதை மகாசரஸ்வதியின் ஆற்றலையும், படைப்பு கடவுள் பிரம்மனின் சக்தியையும், தன்னுள்ளே அடக்கி எல்லா வளங்களையும் அளிக்கக்கூடிய மகாலக்ஷ்மியுடன் ஞானக் கடலான ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் நமக்கு அருள்பாலிக்கிறார். ஆழ்கடலில் ஆழப் புதைத்து வைத்த அரிய பொக்கிஷமான வேதத்தை, ஹயாசுரன் என்ற அசுரனின் சூழ்ச்சியையும் முறியடித்து எல்லா வித்தைகளுக்கும் ஆதார தேவதையாக நம்மை அரவணைத்து ரட்சிக்கிறார். சாஸ்திரத்தில் பெருமையாக போற்றப்படும் ஸகஸ்ரநாமத்திற்கு எல்லாம் சிகரமாக போற்றப்படும் ஸ்ரீ லலிதா ஸகஸ்ர நாமத்தை நமக்கு அளித்தவரே இவர்தானே!

அரவிந்தம் போன்ற சதுர் புஜங்களில் திருவாழியையும் திருச்சங்கையும் பின் திருக்கைகளில் தரித்து, முன் திருக்கைகளில் ஞான முத்திரையும், புத்தகமும் ஏந்தி, தூய பளிங்கு போன்ற ஒளிரும் மேனி உடையவராகவும், வெண்தாமரை மலரில் எழுந்தருளி கல்விக்கு முதற்கடவுளாக விளங்கி, ஞானப்பிரகாசமான, தேவலோக பெருமாள் ஆன இவரை இந்த அரிய ஹோமத்தில் பங்கேற்று வழிபட்டு எல்லா நன்மைகளையும் அடைவோமாக!

இவரை வழிபட்டால்



1. குழந்தைகள் புத்திசாலிகளாகத் திகழ்வார்கள்.
2. மனக் குழப்பங்கள் நீங்கும், வீண் பயம் நீங்கும்.
3. ஞாபக சக்தி அதிகரிக்கும்.
4. ஞானம், தெளிவு ஏற்படும்.
5. படிப்பில் உள்ள மந்த நிலை மாறும்.
6. மன அழுத்தம் நீங்கும், சத்ருக்கள் அழிந்து போவர்.
7. அஷ்ட ஐஸ்வர்யங்களும் ஏற்படும்.
8. வாக்கு பலிதம் ஏற்படும்.
9. வாதத்தில் வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.
10. புத்திசாலித்தனம் கூடி மேதாவி ஆகலாம்.
11. பி.எச்டி. போன்ற ஆராய்ச்சியாளர்களுக்கு கடைசி நேர பிரச்சனை விலகும்.
12. இவரை தியானித்த மாத்திரத்தில் உலகில் நடக்காதது ஒன்றுமேயில்லை.

**தேவையான பொருட்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கலச புடவை வேஷ்டி | ரூ. 700 | பூர்ணாஹுதி பட்டு வேஷ்டி | ரூ. 4500 | பட்டு புடவை | ரூ. 4500 |
| பட்டு பிட்டு | ரூ. 300 | குங்கிலியம் | ரூ. 1500 | மஞ்சள் | ரூ. 3000 |
| பூர்ணாஹுதி மாலை | ரூ. 1000 | விசேஷ திரவியங்கள் | ரூ. 7500 | நெய் | ரூ. 1800 |
| நைவேத்தியம் | ரூ. 500 | பழங்கள் | ரூ. 2000 | | |

## ஸ்ரீ அஷ்டலக்ஷ்மி ஐஸ்வரிய ஹோமம்



ஐஸ்வர்யம் என்பது செல்வம் மட்டும் அல்ல. லக்ஷ்மியை வழிபடும் போது நமக்கு அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிட்டுகின்றன. அஷ்ட லக்ஷ்மிகளால், அஷ்ட ஐஸ்வர்யங்களான நல்ல பதவி, நன்மக்கள், சுற்றம், பொன், ரத்தினமணிகள், நெல் முதலான தானியம், வாகனம், நல்ல பணியாளர்கள் எல்லாமும் சித்திக்கும். லக்ஷ்மி என்ற சொல்லுக்கு கருணை என்று பொருள். புகழ், படிப்பு, வீரம், விஜயம், குழந்தைச் செல்வம், துணிவு, நல்லறிவு, சௌந்தர்யம், பெருமை, ஆரோக்கியம், நற்குலம், நல்லறம், நீண்ட ஆயுள் ஆகிய அனைத்தும் கிடைக்கும். எனவே இப்படிப்பட்ட அஷ்டலக்ஷ்மி ஹோமத்தில் கலந்துகொண்டால் அஷ்ட ஐஸ்வர்யங்களும் மஹாலக்ஷ்மியின் கருணை கடாக்ஷத்தால் நமக்கு அத்தனையும் கிடைக்கும்.

பங்கு பெறுங்கள்! பயன் அடையுங்கள்!!

**தேவையான பொருட்கள் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூர்ணாஹுதி பட்டுப்புடவை | ரூ. 4000 | பட்டு பிட்டு | ரூ. 700 | பூர்ணாஹுதி மாலை | ரூ.1000 |
| புஷ்பங்கள் | ரூ. 2000 | நெய் | ரூ. 1800 | விசேஷ திரவியம் | ரூ. 7500 |
| பழங்கள் | ரூ. 2000 | தாமரை பூ | ரூ. 3000 | நைவேத்தியம் | ரூ.1000 |
| திருமாங்கல்யம், மெட்டி, கொலுசு | ரூ. 8000 | சுவாசினி புடவை | ரூ. 3000 | | |

## குபேர சௌபாக்யலக்ஷ்மி பூஜை



சென்ற ஆண்டுகளில் நடந்த மகானின் ஆராதனை ஜெயந்தி விழாக்களில் கிடைத்த, அபூர்வமான, அற்புதமான சௌபாக்கிய பொருட்களை வைத்து நடத்தப்படும் பூஜை சௌபாக்கியலக்ஷ்மி பூஜை. இவ்விசேஷ பூஜையில் கலந்துகொண்டால் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும், கணவன் மனைவிக்குள் இருக்கும் வேற்றுமை விலகி ஒற்றுமை நிலவும். திருமணம் ஆகி பிரிந்து வாழும் தம்பதிகள் ஒன்று கூடுவார்கள். விவாகரத்து ஆன தம்பதிகளுக்கு மறுமணம் நடக்கும். மகப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு புத்திர பாக்கியம் கிடைக்கும். பணக் கஷ்டத்தினால் மனக் கஷ்டம் உள்ளவர்களுக்கு விமோசனம் கிட்டும். எதிர்பாராத செல்வம் கிடைக்கும். வியாபாரப் பிரச்சனைகள், கடன் தொல்லைகள் நீங்கி, வியாபாரம் பெருகும். பூஜை நடக்கும் நேரத்தில் பிரார்த்தனை செய்துகொண்டு, மனதில் தோன்றிய தொகையை குரு காணிக்கையாக செலுத்தினால், நினைத்த காரியம் சித்தி அடையும். தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிடைக்கும். ஹோமத்தில் கிடைத்த சௌபாக்கிய திரவியங்களை தரிசிக்க விரும்பும் அன்பர்கள் ரூ. 25 கவுண்டரில் செலுத்தி

தரிசிக்கலாம். ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் ஆணைப்படி இவ்வருடம் ஸ்ரீ குபேர கடவுளுக்கும் சேர்த்து இந்த பூஜை நடைபெற உள்ளது.



### ஸ்ரீ மஹா சுதர்ஸன ஹோமம்

காக்கும் கடவுளான ஸ்ரீ மஹா விஷ்ணுவின் வலக்கரத்தில் இடம் பெற்றிருக்கும் சுதர்ஸனம், உலகம் உய்ய காரணமாயிருக்கும் கதிரவனுக்கு கதிர்வூட்டும் களஞ்சியம் என்று கூறுவது பொருத்தமாயிருக்கும். ஆயிரம் சூரியன்கள் ஒன்று சேர்ந்தால் எவ்வளவு சக்தியோ அவ்வளவு சக்தி இந்த சக்கரத்தாழ்வாருக்கு உண்டு. சுதர்ஸன சக்கரத்தாழ்வாரை எல்லோரும் வழிபடலாம். வேல் முருகனின் அம்சம், சக்கரத்தாழ்வார் மஹாவிஷ்ணுவின் அம்சம் ஆவார். மனதை ஒருநிலைப்படுத்தி இந்த ஹோமத்தில் பங்கேற்றால் கீழ்க்கண்ட பலன்களை அடையலாம்.

1. ஏவல், பில்லி, சூன்யங்கள், கண் எரிச்சல், திருஷ்டி உபாதைகள் அகலும்.
2. நெடுநாட்களாக மரணப்படுக்கையில் படுத்திருப்பவர்களுக்கு விமோசனம் கிட்டும்.
3. கணவன் மனைவிக்கு இடையில் உள்ள பிரச்சனைகள் அகலும்.
4. துர்மரணம் ஏற்பட்டு தீய ஆவிகளால் உண்டாகும் தொல்லை அகலும்.
5. அரசாங்கத்தில் வேலை செய்பவர்களுக்கு உள்ள தொல்லை, காவல், ராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் நீங்கும்.
6. நீண்ட நாட்களாக தீராத கோர்ட் வழக்கு தீரும்.
7. தீயினால் ஏற்படக்கூடிய விபத்து அகலும்.

**தேவையான பொருட்கள் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கலச வேஷ்டி, புடவை | ரூ. 700 | பூர்ணாஹுதி பட்டு | ரூ. 4500 | பூர்ணாஹுதி பட்டு பிட்டு | ரூ. 350 |
| பூர்ணாஹுதி மாலை | ரூ. 850 | பழங்கள் | ரூ. 1500 | புஷ்பங்கள் | ரூ. 1500 |
| லட்டு | ரூ. 3500 | தேன் குழல் | ரூ. 3000 | திரவியங்கள் | ரூ. 2000 |
| நெய் | ரூ. 1800 | நைவேத்தியம் | ரூ. 1000 | மஞ்சள் | ரூ. 3000 |
| வெண் கடுகு | ரூ. 500 | வெண்ணெய் | ரூ. 3000 | | |

### தங்கபாதுகை பூஜை

குரு பாத தரிசனம் பாபவிமோசனம். ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் விசேட சக்தியினால் நினைத்த காரியம் நிறைவேறும். ஸத்குருவின் பாத துளிகளிலிருந்து கிளம்பும் பேரொளி மனதில் எல்லையில்லா மகிழ்ச்சியை அளிக்கும்.

### ஸத்குரு ஆராதனை

ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள் எல்லா தேவதைகளின் அருளாசியை நமக்கு ஒன்று திரட்டி அளிக்கிறார். இதில் கலந்துகொண்டால் அனைத்து பிரச்சனைகளும் நீங்கி அருளாசி கிடைக்கும்.

**தேவையான பொருட்கள்:** (8 பேருக்கு)

| | | | |
|---|---|---|---|
| வஸ்திரங்கள் | ரூ. 4000 | பஞ்சபாத்திரம் | ரூ. 40000 |
| தங்க காசு | ரூ. 40000 | மற்ற பொருட்கள் | ரூ. 8000 |

### ஸ்ரீதேவி திருக்கல்யாணம்

ஈசனுக்கும், அம்பிகைக்கும் நடக்கும் கோலாகல நிகழ்ச்சி. இது தெய்வீகத் திருமணம் ஆகும். இதில் பங்கேற்பவர்களுக்கு திருமணம் நடக்கும். கருத்து வேறுபாடுகள் நீங்கும். களத்திர தோஷம் நீங்கும். சொந்தவீடு கிடைக்கும். மங்களம் உண்டாகும்.

**தேவையான பொருட்கள் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காட்டன் புடவை, வேஷ்டி | ரூ. 750 | பட்டு புடவை | ரூ. 4500 | பருப்பு தேங்காய், பட்சணம், | |
| பட்டு வேஷ்டி | ரூ. 4000 | மெட்டி | ரூ. 1000 | பழங்கள், புஷ்பங்கள், மாலை | |
| திருமாங்கல்யம் | ரூ. 7500 | | | மொத்தம் | ரூ. 10000 |

### உமாமகேஸ்வர பூஜை

காமேஸ்வரன் - காமேஸ்வரி ஸ்வரூபமாக தம்பதிகளை அமர்த்தி பூஜை செய்தல். பலன்கள் - தீ விபத்து, சாலை விபத்து, துர்மரணத்தினால் ஏற்படும் தொல்லைகள், கணவன் - மனைவி கருத்து வேறுபாடு, பூர்வ ஜென்ம தோஷங்கள் நிவர்த்தியாகி நல்ல சிந்தனை தெளிவு ஏற்படும்.

**தேவையான பொருட்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பட்டு புடவை | ரூ. 4000 | திருமாங்கல்யம் | ரூ. 7500 | பஞ்ச பாத்திரம் | ரூ. 5000 |
| பட்டு வேஷ்டி | ரூ. 4000 | மெட்டி | ரூ. 1000 | தங்க காசு | ரூ. 5000 |

**ஸ்ரீவித்யா நவாவரண பூஜை**

சிவனையும், சக்தியையும் இணைத்து நமக்குள்ளேயே தரிசனம் செய்யும் வழிபாட்டு முறைதான் ஸ்ரீவித்யா தத்துவம். வாழ்க்கையில் எந்தவிதமான சிக்கலாக இருந்தாலும் உடனே விலகி எண்ணியது நிறைவேறும். ஒவ்வொரு பௌர்ணமி, விசேஷமான நாட்களில் குருஜி திரு. கே.வி.எல்.என். சர்மா அவர்கள் இந்த பூஜையை மிக விமரிசையாக சக்திபீடத்தில் செய்கிறார். ஸ்ரீவித்யா நவாவரண பூஜையில் கலந்து கொள்பவர்களுக்கு ஐஸ்வர்ய குங்குமம் வழங்கப்படும்.

**தேவையான பொருட்கள் :**

சுவாசினி பட்டு புடவை ரூ. 4500/-, கன்யா பட்டு பாவாடை ரூ. 2000/-, வடுகர் வேஷ்டி, துண்டு ரூ. 500.

**சுவாசினி பூஜை கன்யா பூஜை**

ஜாதகத்தில் கிரக தோஷம், நரம்பு சம்மந்தப்பட்ட கோளாறுகள் நீங்கி பலன் அடையலாம். சுமங்கலி சாபம் அகலும்.

**தேவையான பொருட்கள் :** பட்டு புடவை ரூ. 4500/-, பாவாடை ரூ. 2000.

**அன்னதானம்**

பூர்வ ஜென்ம தோஷங்கள் அனைத்தும் நீங்கும்.

**பங்கேற்போம் பலன் அடைவோம்.**

---

## நிகழ்ச்சி நிரல்

### 16-12-2011 வெள்ளிக்கிழமை

| | | | சங்கல்ப கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| காலை | 6.00 | கணபதி ஹோமம் | 100 |
| | 6.30 | கோ பூஜை | 51 |
| | 8.00 | ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்கீரிவர், தன்வந்திரி ஹோமம் | 500 |
| | | ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் அபிஷேகம் | 2500 |
| | 12.10 | பூர்ணாஹுதி | |
| | 12.30 | அன்னதானம் | |
| மாலை | 4.30 | அஷ்டலக்ஷ்மி ஐஸ்வரிய ஹோமம் | 500 |
| | 6.00 | ஸ்ரீ குபேர சௌபாக்யலக்ஷ்மி பூஜை | 300 |
| | | தங்கப் பாதுகை பூஜை | 200 |
| | 7.30 | பூர்ணாஹுதி | |
| | 8.00 | பிரசாதம் வழங்குதல் | |
| | | **17-12-2011 சனிக்கிழமை** | |
| காலை | 7.00 | ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் அபிஷேகம் | 2500 |
| | | ஸ்ரீ மஹா சுதர்ஸன ஹோமம் | 500 |
| | | தர்மசாஸ்த்தா ஹோமம் | 200 |
| | | சாஸ்த்தா ப்ரீதி | 100 |

| | | | |
|---|---|---|---|
| | 11.30 | பூர்ணாஹுதி | |
| | 12.00 | அன்னதானம் | |
| மாலை | 4.30 | அய்யப்பன் பஜனை | |
| | 7.00 | பிரசாதம் வழங்குதல் | |
| | | **18-12-2011 ஞாயிற்றுக்கிழமை** | |
| காலை | 7.00 | மகான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் விசேஷ அபிஷேகம் | 2500 |
| | 9.00 | ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மஹா ஆராதனை | 250 |
| | 11.00 | ஸ்ரீ தேவி திருக்கல்யாணம் | 500 |
| | | ஸ்ரீ உமா மகேஸ்வர பூஜை | 200 |
| | 12.00 | அன்னதானம் | |
| மாலை | 4.00 | ஹஸ்த பூஜை அபிஷேகம் | 2000 |
| | 5.30 | ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திருவீதி உலா | |
| | | சக்திபீட கணபதி திருவீதி உலா | |
| | 8.30 | மங்கள ஹாரத்தி | |
| | | பிரசாதம் வழங்குதல் | |

**ஸ்ரீவித்யா நவாவரண பூஜையை 3 நாட்களும் குருஜி அவர்கள் காலை 7.00 மணிக்கு தொடங்குவார்.**

## தெய்வீக பூஜை மொத்த செலவுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கணபதி ஹோமம் | 8,000 | 9. | சாஸ்த்தா ப்ரீதி | 3,000 |
| 2. | கோமாதா பூஜை | 2,500 | 10. | மகான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் விசேஷ அபிஷேகம் | 2,500 |
| 3. | ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர், தன்வந்திரி ஹோமம் | 50,000 | 11. | ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மஹா ஆராதனை | 1,00,000 |
| 4. | ஸ்ரீ அஷ்டலக்ஷ்மி ஐஸ்வரிய ஹோமம் | 50,000 | 12. | ஸ்ரீ தேவி திருக்கல்யாணம் | 25,000 |
| 5. | ஸ்ரீ குபேர சௌபாக்யலக்ஷ்மி பூஜை | 20,000 | 13. | ஸ்ரீ உமா மகேஸ்வர பூஜை | 15,000 |
| 6. | தங்கப் பாதுகை பூஜை | 2,000 | 14. | நவாவரண பூஜை (3 நாட்கள்) | 10,000 |
| 7. | ஸ்ரீ மஹா சுதர்ஸன ஹோமம் | 40,000 | 15. | ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திருவீதி உலா | 40,000 |
| 8. | தர்ம சாஸ்த்தா ஹோமம் | 25,000 | 16. | அன்னதானம் | 10,00,000 |

## ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகளின் மஹா ஆராதனை விழாவிற்கு தேவையான சாமான்கள்

| | | | |
|---|---|---|---|
| மஞ்சள் பொடி | 3 கிலோ | டேபிள் சால்ட் | 30 கிலோ |
| குங்குமம் | 100 கிராம் | மிளகாய் வற்றல் | 30 கிலோ |
| துவரம் பருப்பு | 4மூட்டை | மிளகாய்த் தூள் | 6 கிலோ |
| கடலை பருப்பு | | தனியா | 15 கிலோ |
| (மாவு உள்பட) | 50 கிலோ | கடுகு | 5 கிலோ |
| பச்சை பருப்பு | 40 கிலோ | மிளகு | 3 கிலோ |
| முழு உளுத்தம் பருப்பு | 50 கிலோ | சீரகம் | 3 கிலோ |
| புளி | 50 கிலோ | வெந்தயம் | 500 கிராம் |
| உப்பு | 30 கிலோ | ஆப்பசோடா | 200 கிராம் |

| | | | |
|---|---|---|---|
| எல்.ஜி. பெருங்காயம்(200ல்) | 6 பாக்கெட் | குங்குமப்பூ | 1 கிராம் |
| எல்.ஜி. பவுடர் (100ல்) | 3 பாக்கெட் | முந்திரி பருப்பு (பத்தை) | 5 கிலோ |
| பொட்டுக்கடலை | 15 கிலோ | திராட்சை | 2 கிலோ |
| வேர்க்கடலை | 3 கிலோ | டைமண்டு கல்கண்டு | 2 கிலோ |
| கொத்துக்கடலை (வெள்ளை) | 8 கிலோ | கேசரி பவுடர் | 50 கிராம் |
| பட்டாணி (பெரியது) | 8 கிலோ | அப்பளம் (100ல்) | 25 கட்டு |
| வெல்லம் (சுமார்) | 100 கிலோ | நல்லெண்ணெய் | 4 டின் |
| சர்க்கரை (சுமார்) | 100 கிலோ | தேங்காய் எண்ணெய் | 8 கிலோ |
| காபி பொடி | 10 கிலோ | ரீபைண்ட் ஆயில் | 10 டின் |
| சிக்கரி (100ல்) | 10 பாக்கெட் | டால்டா | 4 டின் |
| டீ தூள் | 500 கிராம் | சாப்பாட்டு நெய் | 20 கிலோ |
| ஏலக்காய் | 200 கிராம் | இட்லி அரிசி | 40 கிலோ |
| ஜாதிக்காய் | 20 கிராம் | சாப்பாடு பொன்னி | |
| ப.கற்பூரம் | 5 கிராம் | அரிசி (சுமார்) | 25 மூட்டை |

**காசோலை / நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி**

**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் பிருந்தாவனம் டிரஸ்ட்**

21/3, புதிய எண்.43, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை-600 004. தொலைபேசி - 24938734, 24953793

மகான் ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகளின் பிரதான சீடர் ஜோதிட நவரத்தினமணி குருஜி திரு. கே.வி.எல்.என்.சர்மா அவர்கள் துல்லியமாக ஜாதகம் பார்த்து பலன்கள் சொல்வார். ஜாதகம் கம்ப்யூட்டரிலும் போட்டுத் தரப்படும். அதிர்ஷ்ட கற்கள் ஆலோசனையும் வழங்கப்படும்.

முன்பதிவு செய்து கொண்டு வரவும். போன் : 24938734
எங்களது இணையதளம் www.seshadri.info விஜயம் செய்து விபரம் பெறுங்கள்

**தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்:**

காலை 10.00 முதல் 1.00 மணி வரை மாலை 3.30 முதல் 6.00 மணி வரை

**ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவனம்**

1, சன்னதி தெரு, மாடம்பாக்கம், சென்னை - 600 126.
தொலைபேசி : 22281408, 22281337, 22280407

நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு 80G உண்டு.

**ஜாதி மத இனமொழி வேறுபாடின்றி அனைத்து மதத்தினரும் வந்து வழிபடலாம்.**
**எம்மதமும் சம்மதம்**

**1.12.2011 முதல் எல்லா நாட்களும் அலுவலகம் செயல்படும்.**

**பிரதி அமாவாசைதோறும் மாடம்பாக்கம் சக்திபீடத்தில் அருள்வாக்கு உண்டு**

இங்ஙனம்
அறங்காவலர்கள்
ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள் பிருந்தாவன அறக்கட்டளை
ஸ்ரீசக்திபீட கணபதி அறக்கட்டளை

**சக்தி பீடத்தின் மதில் சுவர் கட்டிடத் திருப்பணிக்கு ஒரு அடிக்கு ரூ. 2500/- தந்து அருளைப் பெறுங்கள்.**
**அனைவரும் வருக! ஸத்குருவின் அருளைப் பெறுக!**

**சக்தி பீடத்தின் வெளியீடான சேஷ ஒளி**
**இதழை படித்து பலனடையுங்கள்**

# சபரிவார ஸ்ரீசக்ர மஹாமேரு ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர் சக்திபீட பிருந்தாவனத்தில் சனிப்பெயர்ச்சி விழா

## 21-12-2011 புதன்கிழமை

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் கர வருடம் மார்கழி மாதம் 5ம் தேதி புதன்கிழமை (21-12-2011) சனிப்பெயர்ச்சி விழா நடைபெற உள்ளது. ஸ்ரீசனீஸ்வர பகவான் கன்யா ராசியில் இருந்து துலா ராசிக்குப் பிரவேசிக்கிறார். அதை முன்னிட்டு மாடம்பாக்கம் 18 சித்தர் சக்திபீட பிருந்தாவனத்தில் ஸ்ரீசனீஸ்வர சாந்தி ஹோமம் நடைபெற உள்ளது. சனியின் உக்கிரகம் தணிய சுப பலன்கள் நடக்க **மேஷம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மீனம்** ராசிக்காரர்கள் பரிகாரம் செய்து கொள்வது நல்லது. எந்த தசை நடந்தாலும் சனி புத்தி, சனி தசை நடக்கும் ஜாதகக்காரர்களும் ஹோமத்தில் பங்கேற்று பலன் பெறுவது நல்லது.

18 சித்தர் சக்திபீட பிருந்தாவனத்தில் உள்ள 18 சித்தர்களும் ஒன்பது நவக்கிரகங்களைப் பிரதிபலிக்கிறார்கள். அதில் ஸ்ரீகபிலர் சித்தர் ஸ்வாமிகளும், ஸ்ரீகருவூரார் சித்தர் ஸ்வாமிகளும் ஸ்ரீசனீஸ்வர பகவானை பிரதிபலித்து அருள்பாலித்துக் கொண்டு இருக்கின்றார்கள். சனிப்பெயர்ச்சி விழா அன்று இவர்களுக்கு விசேஷமாக அபிஷேகங்கள் நடைபெற உள்ளது.

1. ஜாதகத்தில் உள்ள சனிதோஷம் நீங்கி நன்மை கிடைக்கும்.
2. ஏழரைச்சனி, அஷ்டமச்சனி, கண்டச்சனியால் ஏற்படும் கோளாறுகள் அகலும்.
3. வாகனத்தால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் நீங்கும்.
4. போக்குவரத்துத் துறையில் உள்ளவர்களுக்கு உண்டான பிரச்சனைகள், லாரி, ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் நீங்கும்.
5. இரும்பு விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் நீங்கும்.
6. படிப்பில் உள்ள மந்தநிலை மாறும்.
7. எதிலும் வெற்றி கிடைக்காமல் தடை ஏற்படக்கூடிய நிலை மாறும்.
8. எலும்பு சம்பந்தப்பட்ட கோளாறு அகலும்.
9. வேலையாட்களால் முதலாளிகளுக்கு ஏற்படும் பிரச்சனைகள் அகலும்.
10. பிரம்மஹத்தி தோஷம் அகலும்.
11. புத்திரபாக்கியம் கிடைக்கும்.

ஹோமம் தொடங்கும் நேரம் காலை 7.00 மணி　　　　பூர்ணாஹுதி 10.30 மணி

### சங்கல்ப கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| சனீஸ்வர ஹோமம் | ரூ. 250.00 | ஒரு சித்தர் அபிஷேகம் | ரூ. 350.00 |
| சிறப்பு அன்னதானம் | ரூ. 2,000.00 | | |

### தேவையான பொருட்கள்

கலச வேஷ்டி ரூ. 500, பட்டு வேஷ்டி ரூ. 4000, பட்டு பிட்டு 400, பூர்ணாஹுதி மாலை ரூ. 700, எள் உருண்டை ரூ. 1000, பழங்கள் ரூ. 1000, நெய் ரூ. 1500, நைவேத்தியம் ரூ. 1000.

### சித்தர்களுக்கான வைப்பு நிதி ரூ. 5,000/-

சனிப்பீரீதி செய்துகொள்ள வேண்டிய அன்பர்கள் ரூ. 5,000/- நிரந்தர வைப்பு நிதியாக செலுத்தினால் வருடத்திற்கு ஒருநாள் சிறப்பு அபிஷேகம் செய்யப்படும்.

குருஜி திரு. கே.வி.எல்.என்.சர்மா அவர்கள் சனிப்பெயர்ச்சி பலன்களைக் கூறுவார்

# சிறப்பான செங்கோல் பூஜை

சக்தி பீடத்தில் அமைந்துள்ள அற்புதமான சன்னிதிகளில் ராஜகாளியம்மன் சன்னிதி மிகவும் விசேஷமானதாகும். பல ஆண்டுகளுக்கு முன்னால் திண்டுக்கல் அருகே உள்ள தெத்துப்பட்டி கிராமத்தில் ஸ்ரீ ராஜ காளியம்மன் நம் குருஜி அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டாள். அந்த ராஜ காளியம்மன்தான் நம் சித்தர் சக்திபீடத்தில் கோஷ்ட விக்கிரமாக நம் அனைவரின் வாழ்க்கை பசுமையாக்கும் பச்சைக்கல் ராஜகாளியம்மனாக செங்கோலுடன் வீற்றிருக்கிறாள். இங்கு வந்து செங்கோல் பூஜை செய்தால் நினைத்த காரியங்கள் அனைத்தும் நிறைவேறும். ஞாயிற்றுக்கிழமை இராகு கால நேரத்தில் இங்கு வந்து எலுமிச்சம் பழ விளக்கேற்றி வழிபட்டால் நம் வாழ்வில் எல்லா வளமும் உண்டாகும். செங்கோல் பூஜை செய்து சிறப்பான பலன்களை பெறலாம்,

# சித்தர்கள் வேள்வி

18 சித்தர்களுக்கும் **சித்தர் வேள்வி** நடைபெறுகின்றது. இந்த வேள்வியை அன்பர்கள் தங்கள் கரங்களாலேயே செய்யலாம். இது ஒரு அரிய வாய்ப்பு. தெய்வங்களுக்கு நாம் செய்யும் வேள்வியின் பலனைவிட தெய்வ அருள்பெற்ற சித்தர்களுக்கு நாம் செய்யும் சிறப்பான வேள்விக்கு 1000 மடங்கு பலன் அதிகம்.

ஜாதி, மத, இன, மொழி பேதமின்றி எல்லோரும் இந்த வேள்வியை செய்யலாம்.

# ஸ்ரீ துலாபாரம்

குருவாயூரில் இருப்பதுபோல் மாடம்பாக்கம் சக்திபீட பிருந்தாவனத்தில் அமர்ந்து எல்லோருக்கும் நல்லாசி வழங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ குருவாயூர் கிருஷ்ணனுக்கு துலாபாரம் கொடுங்கள். சர்க்கரை நோய் உள்ளவர்கள் சர்க்கரையோ அல்லது வெல்லமோ துலாபாரம் கொடுக்கலாம். அரிசி கொடுத்தால் சுபிட்சம் பெருகும். தானியம் பிரச்சனை நீங்கும். வாழைப்பழம் கொடுத்தால் வயிற்று வலி, தலைவலி, கர்ப்ப சம்பந்தப்பட்ட நோய்களிலிருந்து விடுதலை பெறலாம்.



# இலவச மருத்துவ முகாம்

கடந்த 10 ஆண்டுகளாக சக்தி பீடத்தின் பாலாலயத்தில் வியாழனும், ஞாயிறும் இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. பரந்த மனம் கொண்ட பல டாக்டர்கள் இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கிறார்கள். எண்ணற்ற மக்கள் பலன் அடைகிறார்கள்.